2018 ஜனவரி 11]
23—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***4531—திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சி, ராமசாமி நகர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. நந்தகுமார், இரண்டு கேள்விகள் கொடுத்தாகிவிட்டது.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *உறுப்பினர், இரண்டு கேள்விகளையும் கேட்டுவிட்டார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்து வாழ்ந்து கொண்டும், பள்ளி மாணவர்களுக்கு 14 வகையான பொருட்களை வழங்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தபோது, "ஏழைகளே இல்லாத தமிழகத்தை உருவாக்கிக் காட்டுவேன்" என்று சூளுரை ஏற்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10–25

அது, கல்வி ஒன்றால் மட்டுமே அது முடியும் என்ற வகையில் அந்தச் சூளுரையை நிறைவேற்றும் நம்முடைய முதல்வர் அவர்களுக்கும், துணை முதல்வர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வினாவில் குறிப்பிட்டிருக்கின்ற கோவை மாநகரத்திலே, ராமசாமி நகர் நடுநிலைப் பள்ளியில், 36 மாணவர்கள் இருக்கின்ற காரணத்தின் அடிப்படையிலும், அருகிலே 5 கிலோ மீட்டர் தொலைவிற்குள் கவுண்டம்பாளையம் உயர்நிலைப் பள்ளியும், மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியும் இருக்கின்ற காரணத்தினாலும் அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தித் தருவதற்கு வாய்ப்பு இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார் அவர்கள்.

திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவுத் திட்டம் தந்த சரித்திர நாயகன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாரிசாகத் தோன்றி, தமிழகத்தை தரணியிலே தலைசிறந்த மாநிலமாக மாற்றிட, குறிப்பாக பள்ளிக் கல்வித் துறைக்கு ஏராளமான திட்டங்களை அறிவித்து, அவற்றில் முதன்மைத் திட்டமான மடிக்கணினி வழங்கும் திட்டத்தின்மூலம் பார் போற்றிடும் வகையில் நம்மை ஆண்ட நம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெறும் அம்மாவின் அரசினை தலைமையேற்று நடத்திடும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

கோயம்புத்தூர் மாநகராட்சி, ராமசாமி நகரில் செயல்பட்டு வரும் இந்தப் பள்ளி சுமார் 58 ஆண்டுகளுக்கு முன்னர் துவக்கப்பட்டது. இன்று சுமார் 280 மாணவ, மாணவிகளோடு நடுநிலைப் பள்ளியாக சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. இந்தப் பள்ளியைச் சுற்றி செயல்பட்டு வரும் அரசு உயர்நிலைப் பள்ளிகள், அதிக தொலைவில் உள்ள காரணத்தினால் இந்தப் பள்ளியை தரம் உயர்த்த வேண்டி 2000 ஆம் ஆண்டு பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலமாக ஒரு இலட்சம் ரூபாய் செலுத்தப்பட்டு, தரம் உயர்த்தக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். 280 மாணவர்கள் இந்தப் பள்ளியிலே படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கேட்டதையெல்லாம் கொடுக்கும் இந்த அரசு மற்றும் சாதனை மன்னனாக திகழ்ந்து கொண்டிருக்கின்ற இந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் இந்தப் பள்ளியையும் தரம் உயர்த்தித் தர வேண்டுமாய் தொகுதி மக்களின் சார்பாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2018 ஜனவரி 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டிருக்குமேயானால் உறுப்பினர் திரு. அருண்குமார் அவர்களுக்கு அடுத்த ஆண்டு அருள் கிடைக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார் அவர்கள்.*

திரு. பி.ஆர்.ஜி. அருண்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

24—

பாதாள சாக்கடைத் திட்டம்

***342—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *ஒட்டன்சத்திரம் தொகுதி, ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்ட அறிக்கை தயார்*